# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்ட பீடம்

## சட்டமாணி (மீள்) தேர்வு, ஆண்டு I, 2018

## அரசியலமைப்புச் சட்டம் I

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 07

எவையேனும் **நான்கு** (04) வினாக்களுக்கு **மட்டும்** விடை தருக.

(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்)

---

1. "*சட்ட ஆட்சி* என்பது அண்மைக் காலங்களில், தன்னளவிலேயே தன்னுருப்பெற்ற ஒன்றாக வந்துள்ளது. இது சர்வதேச முகவரகங்களால் பாராட்டப்படுவதுடன் மோதலுக்குட்பட்டிருக்கும், மோதலுக்குப் பிற்பட்ட, மற்றும் *நிலைமாறுகால* சமூகங்களின் மீது வலியுறுத்தப்பட்டும் வருகின்றது. அத்துடன், அரசியல்வாதிகள் மற்றும் சட்டவாதிகளாலும் குறிப்பாக நீதிபதிகளாலும் இது உலகம் முழுவதிலும் பேசப்பட்டும் வருகின்றது."

   இந்தக் கருத்தேற்பானது இலங்கையில் ஜனநாயக ஆட்சி முறைமையின் வளர்ச்சியில் எந்தளவுக்குப் பங்களிப்புச் செய்துள்ளது என்பதை ஆராய்க. உமது விடையினை திட்டவட்டமான உதாரணங்களால் ஆதாரப்படுத்துக.

2. "அரசாங்கத் தத்துவங்களை சட்டவாக்க, நிறைவேற்றுத்துறை மற்றும் நீதித்துறைத் தத்துவங்கள் என வகைப்படுத்தலானது சட்டத்தின் அடிப்படையில் அமைந்ததான அரசாங்க முறைமையொன்றுக்குள் பல கருத்தியல் ரீதியிலான சிக்கல்களுடன் சம்பந்தப்படுகின்ற அதேவேளை, சட்டமாக்குதல், சட்டத்தை நிறைவேற்றுதல் மற்றும் சட்டமுறையில் நீதிகாணுதல் ஆகிய பிரதான பணிகளுக்கிடையில், அரசியலமைப்புக் கட்டமைப்பிலும் நடபடியிலும், வேறுபாட்டைக்காணுதல் முக்கியமானதேயாகும். இந்த வேறுபாடுகள் கைவிடப்படுமானால் சட்டம் என்ற கருத்தேற்பானது தன்னளவில் தப்பிப் பிழைத்தல் அரிதாகிவிடும்."

   மேற்போந்த கூற்றினை இலங்கையில் வலுவேறாக்கம் என்ற கோட்பாட்டுடன் விசேடமாகத் தொடர்புறுத்தி ஆய்ந்துரைக்க.

3. 'பாராளுமன்ற மீயுயர்தன்மை என்பது இலங்கையின் சமகால கட்டமைவுப் பின்னணியில் பொருத்தமானதல்ல என்று அடிக்கடி வாதிடப்படுகின்றது. இருப்பினும் இலங்கை மீது செல்வாக்குச் செலுத்தியிருக்கும் பாரம்பரியங்களானவை, இலங்கையின் அரசியலமைப்புக்

கட்டமைப்புக்குள் பாராளுமன்ற மீயுயர்தன்மை உள்ளதென்ற உளப்பாங்கினையே தொடர்ந்தும் வைத்திருக்கின்றன. நீதித்துறையானது சட்டமாக்குனராக வருவதனைத் தடுப்பதற்காக, பாராளுமன்ற மீயுயர்தன்மையானது தொடர்ந்தும் வைத்திருக்கப்பட வேண்டுமென்று மேலுஞ் சிலர் வலியுறுத்துகின்றனர்.'

மேற்போந்த கூற்றின் வலிதுடைமை மீது கருத்துரைக்க. உமது விடையினை சுதந்திரத்துக்குப் பிந்தியதான இலங்கையின் அரசியலமைப்புக்களிலிருந்து பெறும் உதாரணங்களால் ஆதாரப்படுத்துக.

4. சமூகத்தின் வளர்ச்சியிலும் அதன் படிமுறையான முன்னேற்றத்திலும் அத்துடன் அதிகாரப் பிரயோக மூலங்களைத் தம்மகத்தே வைத்துள்ளவர்களின் நல்லாட்சியினை உறுதிப்படுத்துவதிலும் நீதித்துறையானது நன்கு அங்கீகரிக்கப்பட்டதான வகிபாகமொன்றைக் கொண்டுள்ளது. அந்தளவில், சுதந்திரமான சமூகமொன்றுக்குத் தேவைப்படுவதான இறுதி இலக்கினையும் நல்லாட்சியினையும் அடைவதில் சுதந்திரமான நீதித்துறையின் வகிபாகத்தின் முக்கியத்துவம் பற்றி இரு கருத்துக்கள் இருக்க முடியாதெனலாம்.

நீர் உடன்படுகின்றீரா? ஜனநாயக சமூகமொன்றில், அத்தகைய சுதந்திரத்தினைப் பற்றிநிற்பதற்கு உதவுவதான காரணிகளை உமது விடையானது அடையாளங்காட்டுதல் வேண்டும்.

5. Harry என்பவன் Sereneland என்ற குடியரசு நாட்டின் உயர்கல்வி அமைச்சின் ஓர் ஊழியனாக இருந்தான். Sereneland இல் முக்கியமாகப் பாவிக்கப்படும் இரு மொழிகளான **'க'** மற்றும் **'கா'** என்பவற்றில் அவன் சரளமான திறனைக் கொண்டிருக்க வேண்டுமென்று அவனது நியமனக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது. **'கா'** என்ற மொழியில் அவன் பாண்டித்தியம் பெறத் தவறியுள்ளமையினால் உடனடியாக அவனது சேவைகள் முடிவுறுத்தப்படுவதாகக் கூறும் கடிதமொன்றினை அவனது நியமனத்தின் ஐந்து வருடங்களின் பின்னர் உயர்கல்வி அமைச்சர் Harry க்கு அனுப்புகின்றார். தான் மேற்கூறிய மொழியிலான பாண்டித்தியம் பெற்றுள்ளானா என்பதைக் கண்டறிவதற்காக தகுந்த மதிப்பீட்டு முறைமையொன்று உயர்கல்வி அமைச்சினால் பின்பற்றப்படாமையினால் தனது சேவைகளின் முடிவுறுத்தலானது நியாயமற்றதும் அநீதியானதும் என்று Harry கூறுகிறான். இத்தகைய சூழ்நிலைகளினால் மிகவும் ஏமாற்றத்துக்குட்பட்ட Harry, உயர்கல்வி அமைச்சினையும் அதன் மொழிக் கொள்கையினையும் விமர்சித்து 'Sereneland Daily' என்ற பத்திரிகையில் கட்டுரை ஒன்றினை வரைகின்றான். அக்கட்டுரையானது உயர்கல்வி அமைச்சரான Mr. Perera வினையும் விமர்சிக்கின்றது. அமைச்சரை விமர்சித்தமைக்காக, அக்கட்டுரை பிரசுரிக்கப்பட்ட மறுநாள் Harry பொலிசாரினால் கைது செய்யப்படுகின்றான். தனது உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக Harry நம்புகின்றான்.

Sereleand இன் சட்ட முறைமையானது இலங்கையினதை ஒத்ததாகக் கருதிக்கொண்டு Harry க்கு ஆலோசனை வழங்குக.

6. 1978 ஆம் ஆண்டின் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புக்கான 19வது திருத்தத்தின் அறிமுகமானது நிறைவேற்றுத்துறை ஜனாதிபதி பதவியின் தத்துவங்களை மட்டுப்படுத்தும் அதேவேளை, நல்லாட்சியினை மேம்படுத்துவதனையும் கருத்தில் கொண்டிருந்தது.

   நீர் உடன்படுகின்றீரா? உமது விடையினை 19வது திருத்தத்தின் மூன்று முக்கிய சிறப்பியல்புகளினால் ஆதாரப்படுத்துக.

7. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினை (02)** பற்றி மட்டும் குறிப்பெழுதுக:
   - அ) அரசியலமைப்பு ஆத்மார்த்தவாதம் (constitutionalism);
   - ஆ) டொனமூர் அரசியலமைப்பின் (1931) இன் கீழான ஆட்சிக்குழு முறைமை;
   - இ) அடிப்படை உரிமைகள் மனுவொன்றைக் கொண்டுவருவதற்கான தகவுள்ளோர் (locus standi).

*********